28.2.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 4.32 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை முதல் 4.32 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வி.கே. சண்முகம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட செய்தி குறிப்பு: காலநிலை, பருவநிலை மாற்றத்தின்போது கோமாரி நோய் கால்நடைகளை பாதிக்கிறது. கோமாரி நோயால் மாடுகள் பாதிக்கப்பட்டு இறப்பு நேரிட வாய்ப்புள்ளது. இது விவசாயிகள், கால்நடை வளர்ப்போருக்குப் பெரிதும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. எனவே இந்த நோயைக் கட்டுப்படுத்த ஆண்டுதோறும் கால்நடைத் துறை சார்பில் மார்ச், செப்டம்பர் மாதங்களில் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. அந்த வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 8-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி திட்ட முகாம் மார்ச் 1 ஞாயிற்றுக் கிழமை தொடங்க உள்ளது. இந்த முகாம் மூலம் மாவட்டத்தில் உள்ள 4,32,919 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இந்த முகாம் மார்ச் 21-ஆம் தேதி வரை நடைபெறும். மாவட்டத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம், சிட்லபாக்கம் ஆகிய 4 கோட்டங்களில் 82 மருத்துவக் குழுக்கள் மூலம் கோமாரி நோய் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. எனவே விவசாயிகள், கால்நடை உரிமையாளர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அவரவர் கால்நடைகளை பாதுகாத்துக் கொள்ளும்படி அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## கால்நடைகளுக்கு இலவச பசுந்தீவனம்: 15 நாள்களுக்குள் வழங்க ஏற்பாடு

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு இலவசமாக பசுந்தீவன விதைகள் 15 நாள்களுக்குள் வழங்க உள்ளனர். கால்நடை வைத்திருப்போர் தங்களது பெயர்களை கால்நடை பராமரிப்பு துறையில் பதிவு செய்து கொள்ளலாம் என கால்நடை துறை அலுவலர் தெரிவித்துள்ளார். சிவகங்கை மாவட்டத்தில் விளைந்துள்ள தானியம் மற்றும் நெல் போன்றவற்றை அறுவடை செய்யும் பணி தற்போது நடந்து வருகிறது. இந்நிலையில் கோடைகாலம் தொடங்கி விட்டதால் ஆடு, மாடுகளுக்கு தேவையான பசுந்தீவனங்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவன விதைகளை இலவசமாக வழங்க கால்நடை பராமரிப்பு துறை ஏற்பாடு செய்துள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் 2 லட்சத்து 38 ஆயிரம் ஆடு, மாடுகள் உள்ளன. இவற்றிற்கு தேவையான பசுந்தீவனங்களான கோஎப்எஸ் 29, ஆப்ரிக்கன் டால் மாய்ஸ், (சோளத்தட்டை) தட்ட பயிறு விதைகள் வழங்க உள்ளோம். இவை வெட்ட வெட்ட வளரக்கூடியது. இந்த விதைகளில் விளையும் பசுந்தீவனம் புரதச்சத்து அதிகம் கொண்டது. கால்நடை வளர்ப்போர் நீர் ஆதாரம் இருந்தால் பட்டா, சர்வே எண்ணுடன் கால்நடை மருத்துவரை அணுகி பெயரை பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு சிவகங்கை, காரைக்குடி கால்நடை பராமரிப்புத் துறை அலுவலரை அணுகலாம் என்றார்.

## தேமங்கலத்தில் கால்நடை மருத்துவ முகாம்

நாகை மாவட்டம், தேமங்கலம் ஊராட்சியில் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள விலையில்லா கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பாிசோதனையும், விலையில்லா வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை முகாமை மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால் வெள்ளிக்கிழமை தொடங்கிவைத்து அவர் பேசியது: தமிழக அரசின் விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2014-2015-ஆம் ஆண்டு வரை நாகை மாவட்டத்தில் 2600 பயனாளிகளுக்கு 2600

விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 2014-2015 ஆம் ஆண்டு வரை 18320 பயனாளிகளுக்கு 73,280 விலையில்லா வெள்ளாடு கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள விலையில்லா கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பாிசோதனையும், விலையில்லா வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை முகாமும் ஒவ்வொரு மாதம் நடைபெற்று வருகிறது. பிப்ரவரி மாதத்துக்கான சிகிச்சை முகாம் வெள்ளி, சனிக்கிழமை நடைபெறுகிறது. நாகை மாவட்டம், தேமங்கலம் ஊராட்சியில் 71 பயனாளிகளுக்கு 284 விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த முகாமில் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் அதன் குட்டிகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது என்றார் ஜெயபால். நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தலைமை வகித்தார். விழாவில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கோ. அண்ணாதுரை, வட்டாட்சியர் நாராயணசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## "ஒரு லட்சம் ஒரு ஹெக்டேர் திட்டத்தில் 1,000 செயல்விளக்கப் பண்ணைகள்'

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளத்தில் ஒரு லட்சம் ஒரு ஹெக்டேர் திட்டத்தில் 1,000 செயல்விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது. பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுலகக் கூட்ட அரங்கில், வேளாண்மைத் துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்த ஆட்சியர் மேலும் பேசியது: பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளத்தில் ஒரு லட்சம் ஒரு ஹெக்டேர் திட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் 1,000 செயல்விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை, 118 செயல்விளக்கப் பண்ணைகளில்

அறுவடை செய்யப்பட்டதில் அதிகபட்சமாக ஒரு ஹெக்டருக்கு 7,100 கிலோவும், சராசரியாக 6,180 கிலோவும் மகசூல் கிடைத்துள்ளது. அதேபோல, பருத்தியில் ஒரு ஹெக்டரில் 1.25 லட்சம் திட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் 1,000 செயல்விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. இதில், ஒருமுறை பருத்தி எடுக்கப்பட்டதில் ஒரு ஹெக்டருக்கு சராசரியாக 3-4 குவிண்டால் கிடைத்துள்ளது. பருத்திக்கு உரிய விலை கிடைக்க, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செவ்வாய்கிழமைதோறும் ஏலம் நடத்தப்பட்டு வருகிறது. பருத்தியை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கொண்டுவந்து விற்பனை செய்ய களப்பணியாளர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. பெருநகர காய்கறி சாகுபடி திட்டத்தின் மூலம், அனைத்து வட்டாரத்திலிருந்தும் ஆயிரம் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 6 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை, முருங்கை, தக்காளி, மிளகாய், கத்தரிக்காய், முள்ளங்கி மற்றும் பந்தல் காய்கறிகள் 167 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மேலும், குழுக்கள் மூலம் 40 சதவீத மானியத்தில் வாகனம் பெற்று சாகுபடி செய்யப்பட்ட காய்கறிகளை விற்பனை செய்துகொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார் ஆட்சியர். கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் வே. அழகிரிசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) இரா. கனகசபை, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் (பொ) ராஜேந்திரன், தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) மா. இந்திரா, வேளாண்மை துணை இயக்குநர் சு. அய்யாசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## மானிய விலையில் வேளாண் கருவிகள்

வாங்கிட விவசாயிகளுக்கு அழைப்புபட்டுக்கோட்டைவிவசாயிகள் மானிய விலையில் வேளாண் கருவிகளை வாங்கிப் பயன்பெறுமாறு, வேளாண் உதவி இயக்குநர் அழைப்பு விடுத்துள்ளார்.இதுகுறித்து, தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம், வட்டார வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி, வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நடப்பு, 2014 - 15 தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் என்ற திட்டத்தின் கீழ், நெல், சிறுதானியங்கள் மற்றும் கரும்பு ஆகிய உணவு தானிய பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க, பல்வேறு தொழில்நுட்ப செயல்விளக்கங்கள் அளிக்கப்படுகிறது. மேலும், விதைகள், விதை உற்பத்தி, கைத்தெளிப் பான்கள், பண்ணை கருவிகள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், கலைக் கொல்லி, குழாய்கள், தெளிப்புநீர் பாசன கருவிகள், மழை தூவி உள்ளிட்ட அனைத்தும், 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது.ரொட்டவேட்டர் இயந்திரத்துக்கு, 35 ஆயிரம் ரூபாய் மானியமும், நீர் கொண்டு செல்லும் குழாய்க்கு, 15 ஆயிரம் ரூபாய், கைத்தெளிப்பான், 600 ரூபாய், விசை தெளிப்பான், 3,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். தவிர, பயிர் பாதுகாப்பு மருந்துகள், நெல் நுண்ணூட்ட கலவை, கலைக்கொல்லி ஆகிய இடுபொருட்கள், 50 சதவீத மானியத்திலும் வழங்கப்படுகிறது.விவசாயிகள் தங்களின், பட்டா, சிட்டா, அடங்கல், ஆதார் அடையாள அட்டை, இரண்டு ஃபோட்டோக் கள், போர்வெல் இருக்கும் இடத்தை அடையாளம் காட்டுவதற்கான பீல்டுமேப் மற்றும் மானியம் போக, நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய பங்கு தொகைக்கான, வங்கி வரைவு ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தோட்டக்கலை இயக்க திட்டத்தில் திருச்சிக்கு ரூ.2.43 கோடி ஒதுக்கீடு

திருச்சி: தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம் சார்பில், திருச்சி மாவட்டத்துக்கு, இரண்டு கோடியே, 43 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில், 2,500 ஹெக்டேர் பரப்பள வில் தோட்டக்கலை பயிர்கள் பயிரிடப்படுகிறது. குறிப்பாக, பழ மரங்களில் வாழை, மா, கொய்யா, காய்கறிகளில் மரவள்ளி, வெங்காயம், கத்திரி, தக்காளி வெண்ணை, பூக்களில் மல்லிகை, விருச்சிபூ, சம்பங்கி, சாமந்தி, ரோஜா, நறுமணம் மற்றும் வாசனை பயிர்களில் மிளகாய், மஞ்சள் மற்றும் பந்தல் காய்கறிகள் பயிரிடப்படுகிறது. தோட்டக்கலை பயிர்களின் பரப்பு அதிகரிக்கவும், உற்பத்தியை பெருக்கவும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தில், 80 ஹெக்டேர் பரப்பளவில் வாழைத்தார் உறை வழங்குதல், நிரந்தர பந்தல் மற்றும் தற்காலிக பந்தல் ஆகியவற்றுக்கு, 16 லட்ச ரூபாய் நிதியில், பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. மேலும், தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் பழத்தோட்டங்கள் அமைக்கவும், பூக்கள் சாகுபடி செய்யவும், மிளகாய் உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு தேவையான விதைகள், வேர்விட்ட குச்சிகள் மற்றும் கிழங்கு மூலம் சம்பங்கி பூ உற்பத்தி செய்ய, 50 சதவீத மான்யத்தில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. சில முக்கிய பயிர்களுக்கு, 100 சதவீத மான்யத்திலும் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், 2014 - 15ம் ஆண்டுக்கு, திருச்சி மாவட்டத்துக்கு, இரண்டு கோடியே, 43 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், தொட்டியம் தாலுகா நாகையா நல்லூரில், நவீனமான முறையில் விவசாயி சதாசிவம் என்பவர் சம்பங்கி பூ தோட்டம் அமைத்துள்ளார். இதே போல், ஆலம்பாளையம் புதூரில் விவசாயி வேலுச்சாமி, வாழைத்தார்களுக்கு உறை அமைத்துள்ளார்.

இதன் மூலம், வாழைத்தாரில் ஏற்படும் கரும்புள்ளிகள் தடுக்கப்படுகிறது. மேலும், பிடாமங்கலத்தில் விவசாயி சுப்பிரமணியம் ஒற்றை கருணை கரும்பு சாகுபடி செய்து வருகிறார். அதே போல், சின்னப்பள்ளி பாளையத்தில் விவசாயி முருகேசன் சொட்டு நீர் பாசனம் மூலம், மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்துள்ளார். இவைகளை, வேளாண்மை துறை இணை இயக்குனர் பால்ராஜ், தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ரவிச்சந்திரன், வேளாண்மை பொறியியல் துறை அலுவலர் பிரசாத் உள்பட அரசு துறை அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். மேலும், எம்.களத்தூரில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை, தடுப்புகள், அமுங்கு குட்டைகள், ஏழுர்பட்டியில் கசிவுநீர் குட்டை ஆகியவற்றையும் விவசாயம் மற்றும் தோட்டக்கலை துறை அதிகாரிகள் பார்வையிட்டனர்.

**<u>வேளாண்துறையின் ஆத்மா திட்ட வட்டார ஆலோசனைக்குழு கூட்டம்</u>**

கண்டமங்கலம்: தமிழக அரசு வேளாண் துறையின் சார்பில் ஆத்மா திட்ட கண்டமங்கலம் வட்டார ஆலோசனைக்குழு கூட்ட தொடக்க விழா பி.டி.ஓ., அலுவலகத்தில் நேற்று நடந்தது. ஒன்றிய சேர்மன் சர்மிளாதேவிநெடுஞ்செழியன், ஒன்றிய அ.தி. மு.க., செயலாளர் ராமதாஸ் முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலர் ஜோதிமணி வரவேற்றார். எம்.எல்.ஏ., ஜானகிராமன் தலைமையேற்று ஆத்மா திட்ட வட்டார ஆலோசனைக்குழு கூட்டத்தை துவக்கி வைத்து, அம்மா பண்ணை மகளிர் குழுவிற்கு 10 ஆயிரம் ரூபாய் சுழல்நிதிக்கான காசோலையை வழங்கி பேசினார். கண்டமங்கலம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் வேல் திட்டத்தை விளக்கிப் பேசினார். பி.டி.ஓ., ரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் மஞ்சு நன்றி கூறினார்.

## புதிய பயிர் காப்பீட்டு திட்டம்மத்திய வேளாண் அமைச்சர் தகவல்

செஞ்சி: புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தை வகுக்க மத்திய அரசு ஆர்வமாக இருப்பதாக மத்திய வேளாண் இணை அமைச்சர் மோகன்பாய் குந்தாரியா தெரிவித்துள்ளார். ஆரணி தொகுதி எம்.பி., ஏழுமலை மத்திய வேளாண்மைத்துறை அமைச்சகத்துக்கு எழுத்து பூர்வமாக கேள்வி எழுப்பினார். இப்போது நடைமுறையில் உள்ள பயிர் பாதுகாப்பு திட்டம் தொடருமா? அல்லது மாநில அரசுகள் தங்களின் சூழ்நிலைக்கு ஏற்ப புதிய பயிர் பாதுகாப்பு திட்டம் துவங்க மத்திய அரசு அனுமதிக்குமா என கேட்டிருந்தார். இதற்கு மத்திய வேளாண் இணை அமைச்சர் மோகன்பாய் குந்தாரியா பதில் அளித்துள்ளார். இதில் தேசிய திருத்தப்பட்ட வேளாண் காப்பீட்டு திட்டம், வானிலை சார்ந்த பயிர் காப்பீட்டு திட்டம், தென்னை, பனை காப்பீட்டு திட்டம் என்ற மூன்று பயிர் பாதுகாப்பு திட்டங்கள் 2013-2014ம் ஆண்டு ராபி பருவத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. சில மாநிலங்கள் கேட்டு கொண்டதற்கு ஏற்ப தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தை மட்டும் அந்த மாநிலங்கள் அமல் படுத்த அனுமதி தரப்பட்டது. நடப்பு நிதியாண்டிலும் இதே திட்டம் தொடர அந்த மாநிலங்களுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது. விவசாயத்துறையின் பல்வேறு பிரிவினரையும் கலந்து ஆலோசித்து, விளைச்சல், விலை நிலவரம் ஆகியவற்றிற்கு ஏற்ற பாதுகாப்பான புதிய பயிர் காப்பீட்டு திட்டம் ஒன்றை வகுக்க மத்திய அரசு ஆர்வம் கொண்டுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## மார்க்கெட் கமிட்டியில் உளுந்து வரத்து அதிகரிப்பு

திண்டிவனம்: திண்டிவனம் மார்க்கெட் கமிட்டியில் நாள் ஒன்றுக்கு 500 மூட்டை உளுந்து வரத்து வருகிறது. மாவட்டத்தில் போதிய மழையில்லாததால், விவசாயிகள் மானாவாரி பயிர்களான உளுந்து, காராமணி, பனிப்பயிர், பச்சைப்பயிர், எள் பயிர் செய்தனர். இந்த பயிர்கள் அறுவடை செய்யப்படுகிறது. திண்டிவனம் மார்க்கெட் கமிட்டிக்கு திண்டிவனம், முருக்கேரி, ஆலங்குப்பம், நடுக்குப்பம், கந்தாடு,

வெள்ளிமேடுப்பேட்டை, தெள்ளார், ஓங்கூர், அச்சிரப்பாக்கம், மதுராந்தகம், செங்கல்பட்டு, கல்பாக்கம் பகுதிகளில் இருந்து விவசாயி கள் விளை பொருட்களை கொண்டு வருகின்றனர். தற்போது திண்டிவனம் மார்க்கெட் கமிட்டியில் நாள் ஒன்றுக்கு உளுந்து 500 மூட்டையும், பனிப்பயிர் 400 மூட்டையும், பச்சைப்பயிர் 100 மூட்டையும், காராமணி 5 மூட்டையும், மணிலா 200 மூட்டையும் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. உளுந்து ஒரு மூட்டை 5531 ரூபாயும், பனிப் பயிர் 6239 ரூபாயும், பச்சைப்பயிர் 7069 ரூபாயும், காராமனி 3500 ரூபாயும், மணிலா 5149 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

**அறுவடைக்கு தயார்நிலையில் இரண்டாம் போக நெல் சாகுபடி**

சின்னமனூர்: சின்னமனூரில் இரண்டாம் போகம் சாகுபடி நெல் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. கடந்த ஆண்டை விட நடப்பு சீசனில் ஹெக்டேருக்கு 1.5 டன் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் உள்ளது. சின்னமனூர் பகுதியில் 3 ஆயிரத்து 750 ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. கடந்த நவம்பர், டிசம்பரில் பெய்ததொடர் மழையால் பெரியாறு அணை 142 அடியை எட்டியது. அணையில் போதிய நீர் இருப்பிருந்ததால், சின்னமனூர் பகுதி நெல் வயல்களுக்கு தடையின்றி தண்ணீர் கிடைத்தது. இதனால் இரண்டாம் போக நெல் நல்ல விளைச்சல் கண்டுள்ளது. கீழக்கால் விவசாயி குமரவடிவேல் கூறுகையில், "சின்னமனூர் பகுதியில் ரஜினி, ஏ.டி.டி., 45., ஜே.சி.எல்., உள்ளிட்ட நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. தேவையான அளவு தண்ணீர் கிடைத்தது. நோய் தாக்குதல் இல்லாததால் நல்ல விளைச்சல் கண்டுள்ளது. இந்த முறை நெல் பயிரிட்டவர்களுக்கு நல்ல வருவாய் கிடைக்கும்," என்றார். விவசாய துறையினர் கூறியதாவது: கடந்த ஆண்டு இரண்டாம் போக அறுவடையில் ஹெக்டேருக்கு 9 டன் மகசூல் கிடைத்தது. இந்த முறை மகசூல் கூடுதலாக கிடைக்கும். நடப்பு சீசனில் ஹெக்டேருக்கு 1.5 டன்

அதிகமாக கிடைக்கும் வாய்ப்புள்ளது. நோய் தாக்குதலின்றி நெல் விளைந்துள்ளதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும், என்றனர்.

## தேனியில் திடீர் மழை

தேனி: தேனியில் இரண்டு மாதங்களாக மழை இல்லாமல் இருந்தது. கோடை காலம் துவங்கியதற்கான அறிகுறிகள் தென்பட்டன. மரங்கள் இலைகளை உதிர்த்தன. தர்பூசணி பழம் விற்பனை அதிகரித்தது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்த நிலையில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாலை 5.30 மணி முதல் 7.30 மணி வரை பலத்த மழை பெய்தது. தொடர்ந்து சாரலும் பெய்து கொண்டே இருந்தது. இதனால் தேனி ரோடுகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. குறிப்பாக பழைய பஸ் ஸ்டாண்டை சுற்றிலும் தண்ணீர் குளம் போல் தேங்கியது. பெரியகுளம் ரோட்டில் பாதாள சாக்கடை திட்ட பணிக்காக தோண்டப்பட்டிருந்த பள்ளங்களில் மழை நீர் புகுந்தது. இதனால் வாகனங்கள் ஊர்ந்து சென்றன. போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. நேற்று மாலை தேனி மட்டுமின்றி மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

## விவசாய உபகரணங்கள்

தேனி: கம்பம், டொம்புச்சேரி, வீரபாண்டி, ஓடைப்பட்டி, லட்சுமிபுரம், கோம்பையில் விவசாய சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு டிராக்டர், பவர் டிரில்லர் உட்பட உபகரணங்கள் குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கம்பம், சில்லமரத்துப்பட்டி, கோம்பை, கடமலைக்குண்டு சீப்பாலக்கோட்டையில் அக்ரி கிளினிக்குகள் செயல்பட்டு வருகின்றன. இங்கு குறைந்த கட்டணத்தில் மண், நீர் பரிசோதனைகள் செய்யப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.

## தென்னை விவசாயிகளுக்கு அதிக பட்ச விலை வழங்கல்நாமக்கல் கலெக்டர் தகவல்

நாமக்கல்:"மற்ற மாவட்டங்களை காட்டிலும், நாமக்கல் மாவட்ட தென்னை விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை அதிகபட்சமாக வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது," என, நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி பேசினார்.நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி பேசியதாவது:நாமக்கல் மாவட்டத்தில் பிளாஸ்டிக் ஒழிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை, 11 ஆயிரத்து, 190 டன் எடையுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், 1.76 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் நெல், சிறுதானியம், பயிர் வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு மற்றும் பருத்தி, 1.69 லட்சம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 15 வட்டாரங்களில், வேளாண் மற்றும் தோட்டக்கலை துறை மூலம், 25 அம்மா பண்ணை மகளிர் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தென்னை விவசாயிகளுக்கு அருகில் உள்ள சேலம், கரூர், திருப்பூர், கோவை போன்ற மாவட்டங் களை காட்டிலும் இழப்பீட்டு தொகை, நாமக்கல் மாவட்ட தென்னை விவசாயிகளுக்கு அதிக அளவு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு: குழந்தைவேல் (விவசாயி): பவர் கிரீட் நிறுவனத்தால் பாதிக்கும் விவசாயிகளுக்கு வழங்க நிர்ணயித்துள்ள தொகை போதுமானதாக இல்லை. மிக குறைவான விலை வழங்கப்படுகிறது. எந்த அடிப்படையில் விலை நிர்ணயம் செய்துள்ளனர் என்பது தெரியவில்லை. ஆகவே, விலை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

தட்சிணாமூர்த்தி (கலெக்டர்): எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்ய வேண்டும் என நினைக்கிறீர்களோ அவற்றை குறிப்பிட்டு தந்தால்,

மறுபரிசீலனை செய்யப்படும். அருகில் உள்ள மற்ற மாவட்டங்களை காட்டிலும், அதிக பட்ச விலை வழங்கி உள்ளது. விவசாயிகளுக்கு அதிக பட்ச பயன் கிடைக்க வேண்டும் என்றே நினைக்கிறேன். பூபாலன் (விவசாயி): பயிர்களை தேசிய பறவை அழித்து வருவதால், விளைச்சல் குறைந்து வருகிறது. அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கலெக்டர்: அனைத்து விவசாயிகளும் கோரிக்கை மனு அளித்தால், அரசின் கவனத்துக்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு விவாதம் தொடர்ந்தது.

**வேளாண் கருவிக்கு 50 சதவீத மானியம்**

சிவகங்கை: "விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வேளாண் கருவிகள் வழங்கப்படும்," என வேளாண் இணை இயக்குனர் (பொ) சுதர்சன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: மாவட்டத்தில் 67 ஆயிரம் எக்டேரில் விவசாயிகள் நெல் நட்டு அறுவடை செய்து வருகின்றனர். நெல்சாகுபடியில் அதிக மகசூல் பெற நவீன யுக்திகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும். இதற்காக தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 50 சதவீத மானியத்தில் வேளாண் கருவிகள் வினியோகம் செய்யப்படுகின்றன. இதில் உழவிற்கு சுழற்கலப்பை, நெல் நடவுஇயந்திரம், ஆயில் இன்ஜின், பம்பு செட்டு, பயிர் பாதுகாப்பு மருந்து, கை மற்றும் விசைத்தெளிப்பான், நெல் அறுவடை இயந்திரம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. விவசாயிகள் அந்தந்த வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு மானிய விலையில் கருவிகள்பெறலாம்,என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மதிப்பு கூட்டிய மீன் உணவுகள் தயாரிப்பு பயிற்சி

புவனகிரி, : தேசிய மீன் வளர்ச்சி வாரியம் மற்றும் பரங்கிப்பேட்டை எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் மீனவர்களுக்கு மதிப்பு கூட்டிய மீன் உணவு பொருட்கள் தயாரித்தல் பயிற்சி, டீசல் இன்ஜின் பயிற்சி, ஜிபிஎஸ் பயிற்சி உள்ளிட்டவை அளிக்கும் நிகழ்ச்சி பரங்கிப்பேட்டையில் உள்ள கிராம வள மையத்தில் நடந்தது. எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்ட அலுவலர் இளங்கோவன் தலைமை தாங்கி, தேசிய மீன் வளர்ச்சி வாரியம் மூலம் அளிக்கப்படும் பயிற்சிகள் மற்றும் திட்டங்கள் குறித்து விளக்கினார். அண்ணாமலை பல்கலைக்கழக கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் டாக்டர் கதிரேசன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பயிற்சியை துவக்கி வைத்து பேசினார். தமிழ்நாடு மீன்வளத்துறை ஆய்வாளர் அஞ்சனாதேவி பங்கேற்று கடல் உணவு பொருட்கள் குறித்து விளக்கி பேசினார். இதில் புதுக்குப்பம், சி.புதுப்பேட்டை, சின்னூர் வடக்கு, சின்னூர் தெற்கு, கிள்ளை, பரங்கிப்பேட்டை, எம்ஜிஆர் திட்டு, அய்யம்பேட்டை ஆகிய மீனவ கிராமங்களை சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த அருள்தேவன், ஸ்ரீகாந்த் ஆகியோர் செய்திருந்தனர்.

### தரமான தேயிலை தூள் உற்பத்தி விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தொழில் தான் பிரதானமாக விளங்கி வருகிறது. டார்ஜிலிங்குக்கு இணை யாக இம்மாவட்டத்தில் சீதோஷ்ண நிலை இருப்பதால் இங்கு உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூளுக்கு அதிக கிராக்கி உள்ளது. மேலும், தற்போது புதிய தொழில் நுட்பத்தில் தேயிலை தூள் உற்பத்தி செய்யப்பட்டு வரும் நிலை யில் பழங்கால முறையில் (குவாலிடி டீ) தரமான தேயிலை தூளை உற்பத்தி

செய்து அதனை நல்ல விலைக்கு விற்பனை செய்வது தொடர்பாக விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகை யில் தேயிலை வாரியம் சார்பில் வரும் 4ம் தேதி குன்னூர் உபாசி கேவிகே அரங்கில் சிறப்பு பயிற்சி முகாம் நடக்கிறது. இதில் தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் அம்பலவாணன், உபாசி கேவிகே விஞ்ஞானி ராமமூர்த்தி மற்றும் மகளிர் சுய உதவி குழுவினர் பங்கேற்று பயிற்சி அளிக்கின்றனர். சிறு தேயிலை விவசாயிகள் குடிசை தொழில் போல் வீடுகளிலே யே தேயிலை தூள் உற்பத்தி செய்வது குறித்து செயல் முறை விளக்கமும் அளிக்கப்படுகிறது. முதல் கட்ட மாக 40 விவசாயி களுக்கு இப்பயிற்சி வழங்க உள்ள தால் விருப்பமுள்ளவர்கள் அந்தந்த பகுதியில் செயல் பட்டு வரும் தேயிலை வாரிய கிளை அலுவலகத்தில் தங்களது பெயர் களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

**<u>கறவை மாடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை முகாம்</u>**

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்தில் உள்ள நான்கு ஊராட்சி ஒன்றியங் களுக்குட்பட்ட பகுதிகளில் இன்று (27ம் தேதி) மற்றும் 28ம் தேதி ஆகிய நாட்களில் கறவை மாடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோ தனை மற்றும் ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிறப்பு முகாம் நடக்கிறது. தமிழக அரசால் விலை யில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட் டது. தமிழகத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக் கில் ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடு, செம்மறி ஆடு வீதம், 31 மாவட்டங்களில் 4 லட்சத்து 88 ஆயிரத்து 273 பயனாளிகளுக்கு, 19 லட்சத்து 53 ஆயிரத்து 092 வெள்ளாடுகள் வழங்கப்பட்டன. மேலும் 21 மாவட்டங்களில் 42 ஆயிரத்து 608 பயனாளிகளுக்கு 42 ஆயிரத்து 608 கறவை பசுக்களும் கடந்த 4 ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது. விலையில்லா கறவை பசுக்கள், ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும்,

வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் இன்று (27ம் தேதி) மற்றும் 28ம் தேதி ஆகிய இரண்டு நாட் களில் கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை நடக்கிறது. மேலும் வெள்ளாடு, செம் மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஊட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பாலகொலா, ஆனைக்க ட்டி (எப்பநாடு), மசினகுடி, முள்ளிகூர் மற்றும் நஞ்சநாடு ஆகிய கிராமங்களி லும், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தில் பேரட்டி, வண்டிசோலை, பர்லியார், மேலூர், எடப்பள்ளி ஆகிய கிராமங்களிலும், கோத்த கிரி ஊராட்சி ஒன்றியத்தில் ஜக்கனாரை, கடினமாலா, கொணவக்கரை, கெங்கரை, கோடநாடு, குஞ்சப்பனை, நடுஹட்டி ஆகிய கிராமங்களிலும், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேரங்கோடு, நெலாக்கோட்டை, ஸ்ரீமது ரை ஆகிய கிராமங்களிலும் குடற்புழு நீக்க சிகிச்சை சிறப்பு முகாம் நடக்கிறது. எனவே, இதில் விலை யில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகள் மட்டுமின்றி, அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளலாம் என கலெக்டர் சங்கர் கேட்டு கொண்டுள்ளார்.

## <u>தண்ணீரை மிச்சப்படுத்தும் 'மைக்ரோ ஸ்பிரிங்லர்' பாசனம் நீலகிரி விவசாயிகள் ஆர்வம்</u>

ஊட்டி, : தண்ணீரை மிச்சப்படுத்தும் மைக்ரோ ஸ்பிரிங்லர் நீர்ப்பாசனம் தற்போது நீலகிரி விவசாயிகளிடம் வரவேற்பை பெற்றுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, மலை காய்கறிகள் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுவாக ஜூன் மாதத் தில் தென்மேற்கு பருவ மழை துவங்கி, தொடர்ந்து வட கிழக்கு பருவமழை பெய்யும். இதனால், 6 மாதங்களுக்கு நீலகிரியில் மழை பெய்யும். ஆனால், சில ஆண்டுகளாக பருவ மழை குறித்த காலத்தில் பெய்வதில்லை. மேலும், சில சமயங்களில் மழை அதிகமாக பெய்கிறது

அல் லது சீசன் சமயங்களில் மழை பெய்யாமலேயே பொய்த்து விடுகிறது. இச்சமயங்களில் நீர் ஆதாரம் உள்ள பகுதிகளில் இருந்து மோட்டார் மூலம் தண் ணீர் எடுத்து அதனை ஸ்பிரிங்லர் மூலம் விவசாய நிலங்களுக்கு பாய்ச்சப்பட்டு வருகிறது. குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் மலை காய்கறி தோட்டங்களுக்கு இம்முறையில் தண்ணீர் பாய்ச்சப் படுகிறது. சாதாரணமாக ஸ்பிரிங்லர் மூலம் தண்ணீர் பாய்ச்சும் போது, தாழ்வான பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் தண்ணீர் நிலத்திற் குள் செல்லாமல் தாழ்வான பகுதியை நோக்கி ஓடி விடும். இதற்கு காரணம் பழைய முறையில் இயங்கும் ஸ்பிரிங்லர் குழாய்களில் அதிகளவான தண்ணீர் வரும் என்பதே ஆகும். நிலம் நன்கு ஈரமாகவும், தண்ணீர் வழிந்தோடாத வகையில் குறைந்த அளவு தண்ணீர் தெளிக்கும் மைக்ரோ ஸ்பிரிங்லர் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தண்ணீர் பாய்ச்சும் போது, குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படுகிறது. அதே சமயம் தாவரங்களுக்கு தேவை யான தண்ணீரும் கிடைக்கிறது. நீலகிரியில் தற்போது பனி மற்றும் வெயில் காரணமாக தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் சூழல் உள்ளது. ஒரு சில இடங்களில் மட்டுமே தண்ணீர் உள் ளது. இதனை பயன்படுத் தியே விவசாயம் மேற் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, விவசாயிகள் இந்த மைக்ரோ ஸ்பிரிங்லரை பயன்படுத்தி குறைந்த அளவில் கிடைக் கும் தண்ணீரை தங்களது தோட்டத்தில் உள்ள அனைத்து காய்கறி செடிகளுக்கும் பாய்ச்சி வருகின்றனர். இந்த மைக்ரோ ஸ்பிரிங்லரை பயன்படுத்துவன் மூலம் தண்ணீர் அதிகளவு மிச்சப்படுத்தப்படுவதாக வும், அதன் மூலம் குறைந்த தண்ணீர் கொண்டு அதிக இடங்களுக்கு தெளிப்பதால், காய்கறி மகசூலும் கணிசமாக அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## <u>பால் உற்பத்தி, எடை அதிகரிக்க கறவை பசுக்கள், வெள்ளாடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை</u>

திருச்சி, : பால் உற்பத்தி, எடை அதிகரிக்க திருச்சி மாவட்டத்தில் கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ

பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் இன்று மற்றும் நாளை நடைபெற உள்ளது. இதுகுறித்து கலெக்டர் பழனிச்சாமி தெரிவித்துள்ளதாவது: விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் கடந்த 2011ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரை 32 கிராம ஊராட்சிகளில் 1,597 கறவை பசுக்களும், 323 கிராம ஊராட்சிகளில் 83,064 வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 1,704 பசுங்கன்றுகளும், 84,289 ஆட்டுக்குட்டிகளும் உற்பத்தியாகியுள்ளன. இந்த கறவை பசுக்களின் பால் உற்பத்தி திறனை அதிகரிக்கவும், வெள்ளாடுகளின் எடையினை அதிகரிக்கவும் இன்று (27ம்தேதி) மற்றும் நாளை (28ம்தேதி) ஆகிய 2 தினங்கள் இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழுநீக்க முகாம் இத்திட்டத்தில் பயன்பெற்ற ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும். இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற விவசாயிகள் பெற்ற பயனாளிகள் மட்டுமல்லாமல் அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## <u>சாகுபடியில் குறைந்த நீர், அதிக மகசூல் தரிசுநிலத்தை விளை நிலமாக மாற்றிய சொட்டுநீர் பாசனம்</u>

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் விவசாய சாகுபடியில் குறைந்த நீர், அதிக மகசூலுடன் தரிசு நிலம் விளைநிலமாய் சொட்டு நீர் பாசனம் மூலம் மாற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன் பெற விரும்புவோர் ஆன்லைனில் விண்ணப்பம் செய்யலாம். திருச்சி மாவட்டம், முசிறி ஒன்றியம், சின்னப்பள்ளிப் பாளையம், பெரியபள்ளிப் பாளையம், எம்.களத்தூர், ஏழுர்ப்பட்டி ஆகிய பகுதிகளில் குறைந்த அளவு நீரைக் கொண்டு அதிக பரப்பளவில் விவசாயம் எளிதில் செய்யும் வகையில் சொட்டுநீர் பாசனமுறை, வேளாண்துறை மூலம் தீவிரமாக செயல்படுத்தப் பட்டு வருகிறது. இதில் குறைந்த அளவு நீரைக்கொண்டு அதிக பரப்பளவில் விவசாயம் எளிதில் செய்யும் வகையில் சொட்டு நீர்பாசன முறை வேளாண்த்துறை மூலம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு

வருகிறது. சொட்டு நீர்பாசனம் அமைக்க 100 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பணிகளை நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட தோட்டக்கலை துறை துணை இயக்குனர் ரவிச்சந்திரன் செய்தியாளர்களிடம் கூறுகையில், நடப்பாண்டில் சொட்டுநீர் பாசனம் அமைக்க வேளாண் துறை சார்பில் 79 எக்டேர் பரப்பளவிலும், தோட்டக் கலைத்துறை சார்பில் 542 எக்டேர் பரப்பளவிலும் அமைத் திட ரூ.3.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்ய வேண்டும். தோட்டக்கலை பயிர் மற்றும் தோட்டக்கலை அல்லாத இதர பயிர்கள் சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு ஒரு எக்டரில் சொட்டுநீர் பாசனம் அமைக்க ரூ.85,400 மானியமாக வழங்கப்படுகிறது. இதில் சிறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வரை 100சதவீத மானியமும், குறு விவசாயிகளுக்கு 2.5 ஏக்கர் வரை 100சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 எக்டேருக்கு மிகாமல் மானியம் வழங்கப்படுகிறது என்றார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் சந்தானம், வேளாண் துறை துணை இயக்குநர் பால்ராஜ், வேளாண் உதவி இயக்குநர்கள் ராஜேந்திரன், ராஜாமணி, உதவி செயற்பொறியாளர்கள் ஷேக்முகமது, பிரசாத் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

## <u>விவசாய பெண் தொழிலாளர்களுக்கு மண்புழு உரம், காளான் வளர்ப்பு பயிற்சி</u>

தோகைமலை : தோகைமலையில் ஸ்கோர் நிறுவனம் சார்பில் விவசாய பெண் தொழிலாளர்களுக்கு மண்புழு உரம் மற்றும் காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. தோகைமலை ஸ்கோர் நிறுவனத்தின் சார்பாக இப்பகுதி விவசாய பெண் தொழிலாளர்களுக்காக மண்புழு உரம் தயாரித்தல், உணவுக் காளான் வளர்த் தல் மற்றும் இயற்கை உரம் தயாரித்தல் பயிற்சிகள் நடைபெற்றது. லண்டன் மார் முன்னிங் ட்ரஸ்ட்

உதவியுடன் நடந்த இந்நிகழ்ச்சியில் ஸ்கோர் நிறுவன ஒருங்கிணைப் பாளர் சிவகுமார் வரவேற்றார். பயிற்சியில் 90 பெண்கள் கலந்து கொண் டனர். பயிற்சி குறித்து ஸ்கோர் நிறுவன இயக்குனர் பாலசுந்தரன் பேசுகையில்; கிராமப்புற ஏழை விவசாய பெண்கள் தொழில் செய்து வருமானம் பெற இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கு நிறுவனம் அனைத்து உதவிகளையும் செய்யும் என்றார். 7 நாட்கள் நடைபெற்ற இந்த பயிற்சியில் மண்ணச்சநல்லூர் மண்புழு உர உற்பத்தி பயிற்றுனர் தியாகராஜன், சுற்றுச்சூழல் ஆர்வலரும், இயற்கை விவசாய விஞ்ஞானியுமான நம்மாழ்வாரின் சீடர் செல்வராஜ், காவல்காரன்பட்டி எஸ்ஆர்டிஓ நிறுவன இயக்குனர் சுப்ரமணியன், கிரீன் இந்தியா அக்ரோ கம்பெனி நிர்வாக இயக்குனர் மணிவேல், திருச்சி டியர் பவுன்டேஷன் நிர்வாக இயக்குனர் தனராஜ் ஆகியோர் செயல்விளக்கத்துடன் பயிற்சியளித்தனர். இதேபோல் உணவு காளான் வளர்ப்பு பற்றியும் காளான் உண்பதால் உடலு க்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும் இதை எவ்வாறு உற்பத்தி செய்வது என்பது பற்றியும் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்கள் இது குறித்து கூறுகையில்: இப்பயிற்சியின் மூலம் மண்புழு உரம் தயாரித்தும், உணவு காளான் உற்பத்தி செய்தும், எங்களது சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி யது போக மீதியை நல்ல விலைக்கு விற்று வருவாய் ஈட்டுவதுடன், ரசாயன உரங்களை பயன்படுத்துவது முழுமையாக தடைபடும் நிலை உருவா கும் என்றனர். இந்த பயிற்சியில் தெலுங்கபட்டி, சின்னரெட்டியபட்டி, பொன்னம்பட்டி, வெள்ளபட்டி, திருமாணிக்கம்பட்டி காலனி, நல்லாக்கவுண்டம்பட்டி, கழுகூர் கஸ்பா, நாகனுர் மற்றும் தோகைமலை பகுதி பெண்கள் கலந்து கொண்டனர். அமைப்பாளர் சரவணகுமார் நன்றி கூறினார். பணியாளர்கள் சர்மிளா, ஆரோக்கியசாமி ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## செட்டிக்குளம் வெங்காய ஏல மையத்திற்கு தரம் பிரிக்கும் கருவி

பெரம்பலூர், : செட்டிக்குளம் சின்ன வெங்காய ஏல மையத்திற்கு வெங்காயத்தைத் தரம் பிரிக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட வருவாய் அதிகாரி தெரிவித்துள்ளார். பெரம்பலூர் மாவட்ட வருவாய் அதிகாரி ராஜன்துரை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் நெல் 8,879 ஹெக்டேரிலும், கரும்பு 5,237 ஹெக்டேரி லும், பயிறுவகை பயிர்கள் 1,879 ஹெக்டேரிலும், பருத்தி 40,049 ஹெக்டேரிலும், தானியப் பயிர்கள் 38,765 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்துப் பயிர்கள் 2,155 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வேளாண் துறை மூலம் நெல் 1.85 டன், நிலக் கடலை 3.295 டன், தானியப்பயிர்கள் 2.182 டன் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. செட்டிக்குளம் சின்ன வெங்காய வணிக வளாகத்தில் கலெக்டரின் சிறப்பு நிதியில் புதியதாக சின்ன வெங்காயம் தரம் பிரிக்கும் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கருவியின்மூலம் சின்ன வெங்காயத்தினை தூசியில்லாமல் அளவின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு தரத்திற்கேற்ப விலை கிடைக்க வழி காணப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மார்ச் 3ம் தேதி மீண்டும் பருத்தி ஏலம் நடத்தப்படுகிறது. இதனை விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திப் பயன்பெற வேண்டும். இந்த ஆண்டிற்கு நுண்ணீர் பாசனத்திற்கு 824 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இணையதளத்தில் பதிவுசெய்து, மாவட்ட இயக்கக் குழு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றில் 299 விண்ணப்பங்களுக்கு 346 ஹெக்டேரில் பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடந்துவருகிறது. மேலும் கூடுதல் நிதி பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என மாவட்ட வருவாய் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## 141 பயனாளிகளுக்கு வெள்ளாடுகள்

திருமானூர், : திருமானூர் அடுத்த செம்பியக்குடி ஊராட்சியில் 141 பயனாளிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகளை அரியலூர் எம்எல்ஏ துரை மணிவேல் வழங்கினார். அரியலூர் மாவட்டம் திருமானூர் அடுத்த செம்பியக்குடி ஊராட்சியில் தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடு வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் செல்வபெருமாள் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு துணைத்தலைவர் குமரவேல், மாவட்ட கவுன்சிலர் இந்திராகாந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் செம்பியக்குடி ஊராட்சிக்கு 31 பயனாளிகளுக்கும், பளிங்காநத்தம் ஊராட்சிக்கு 76 பயனாளிகளுக்கும், சாத்தமங்கலம் ஊராட்சிக்கு 34 பயனாளிகளுக்கும் என 141 பயனாளிகளுக்கு ரூ. 18 லட்சத்து 612 ரூபாய் மதிப்பில், பயனாளி இருவருக்கு 4 ஆடுகள் வீதம் வெள்ளாடுகளை அரியலூர் எம்எல்ஏ துரை மணிவேல் வழங்கி பேருரையாற்றினார். ஊராட்சி தலைவர் பளிங்காநத்தம் சுந்தர்ராஜ், சாத்தமங்கலம் கண்ணகி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஊராட்சி தலைவர் திருவாசகமணி, கால்நடை உதவி மருத்துவர்கள் செந்தாமரை, கார்த்திகேயன், செல்லபாண்டி ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக, ஊராட்சி தலைவர் காமராஜ் வரவேற்றார். நிறைவாக, கால்நடை உதவி இயக்குனர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

## பசுமாடு வாங்க கடனுதவி

பொன்னமராவதி, : பொன்னமராவதி அருகே உள்ள நல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் சார்பில் பசு மாட்டுக் கடன் வழங்கும் விழா நடந்தது. சங்கத்தலைவர் வீரன் தலைமை வகித்தார். கள மேலாளர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். வங்கி செயலர் சோனை யன் வரவேற்றார். நிகழ்ச்சியில் 13 நபர்களுக்கு 30 ஆயிரம் வீதம் பால் மாட்டுக்கடன் வழங்கப்பட்டது. இதில் பால் கூட்டுறவு சங்கத்தலைவர்

ஆதப்பன், மதியரசன், இருளப்பன், வேலுச்சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**திருத்துறைப்பூண்டியில் கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி முகாம்**

திருத்துறைப்பூண்டி, :திருத்துறைப்பூண்டி ஒன்றியம், நகரில் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய்நோய் தடுப்பூசி முகாம் வரும் 1ம் தேதி முதல் துவங்குகிறது.திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் மன்னார்குடி கோட்ட தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால் மற்றும் வாய்நோய் தடுப்பூசி முகாம் வரும் மார்ச் 1ம் தேதி முதல் துவங்குகிறது. 1ம் தேதி சாத்தங்குடி, குன்னூர், குரும்பல், 3ம் தேதி தீவாம்மாபுரம், பழயங்குடி, 4ம் தேதி காடுவாகொத்தமங்கலம், செட்டியமூலை, 5ம் தேதி மேட்டுப்பாளையம், கொத்தமங்கலம், 6ம் தேதி நுணாக்காடு, எழிலூர், 7ம் தேதி விளத்தூர், அம்மனூர், 9ம் தேதி திருவலஞ்சுழி, ஆலத்தம்பாடி, திருத்தங்கூர், 10ம் தேதி கட்டிமேடு, நெடும்பலம், ஆதிரெங்கம், 11ம் தேதி சேகல், தேசிங்குராஜபுரம், 12ம் தேதி கொருக்கை, 13ம் தேதி வேளூர், 14ம் தேதி கீரக்களூர், விளக்குடி, 16ம் தேதி திருப்பத்தூர் பனையூர், கோமல் ஆகிய இடங்களில் முகாம் நடக்கிறது. 17ம் தேதி கீராலத்தூர், ஆண்டாங்கரை, 18ம் தேதி ஆலிவலம், 19ம் தேதி மேலமருதூர், பிச்சன்கோட்டகம், 20ம் தேதி கொக்காலடி ஆகிய கிராமங்களில் காலை 6 மணி முதல் 9 மணி வரையும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையும் முகாம் நடைபெறுகிறது. அந்தந்த பகுதியில் உள்ள விவசாயிகள் அந்தந்த தேதிகளில் தங்களது கால்நடைகளை கொண்டு வந்து 100 சதவீதம் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு ஒன்றிய தலைவர் வேதநாயகி சிங்காரவேலு கேட்டுக் கொண்டுள்ளார். அதேபோல் திருத்துறைப்பூண்டி நகர பகுதியில் 2ம் தேதி 1 முதல் 4வது வார்டு, 4ம் தேதி 5 முதல் 7வது வார்டு, 6ம் தேதி 8 முதல் 11வது வார்டு, 12ம் தேதி 12 முதல் 15வது வார்டு, 16ம் தேதி 16

முதல் 19வது வார்டு, 19ம் தேதி 20 முதல் 22வது வார்டு, 20ம் தேதி 23, 24வது வார்டுகளில் முகாம் நடைபெறுகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கரும்பு பயிரில் சொட்டுநீர் பாசனம் அமைத்திடும் விவசாயிகளுக்கு 100 சதவீத மானிய விலையில் உரம் விநியோகம் கலெக்டர் சரவண வேல்ராஜ் தகவல்**



அரியலூர், கரும்பு பயிரில் சொட்டுநீர் பாசனம் அமைத்திடும் விவசாயிகளுக்கு 100 சதவீத மானிய விலையில் உரம் விநியோகிக்கப்பட உள்ளது என கலெக்டர் சரவணவேல்ராஜ் கூறினார்.

விவசாயிகள்குறைதீர்க்கும்கூட்டம்

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமைதாங்கிபேசியதாவது:-

அரியலூர் மாவட்டத்தில் யூரியா 410 மெட்ரிக் டன், டி.ஏ.பி. 636 மெட்ரிக் டன், பொட்டாஷ் 652 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் உரங்கள் 964 மெட்ரிக் டன் ஆகியவை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பில் உள்ளது. தற்போது திருமானூர், தா.பழூர் வட்டாரங்களில் சம்பா நெல் அறுவடைக்கு பின் நஞ்சை தரிசு வயல்களில் உளுந்து விதைப்பு பணிகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். மேலும் எள் விதைப்பு செய்திட இதுவே உகந்த தருணம்ஆகும்.

சொட்டுநீர்பாசனம்

நீடித்த நவீன கரும்பு சாகுபடி (2014-15) திட்டத்தின் மூலம் 290 எக்டர்

பரப்பில் கரும்பு சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டு நீர் பாசனம் அமைக்க பயனாளிகள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். கரும்பு பயிரில் சொட்டுநீர் பாசனம் அமைத்திடும் விவசாயிகளுக்கு 100 சதவீத மானிய விலையில் கொடுக்கப்பட்டுள்ள நீரில் எளிதில் கரையும் உரங்கள் விநியோகிக்கப்பட உள்ளது. கரும்பு தோகை நிலப்போர்வை அமைப்பதன் மூலம் மண் வளத்தை மேம்படுத்தலாம். இதற்காக தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கரும்பு பயிரில் அறுவடைக்கு பின்னர் கிடைக்கப்பெறும் காய்ந்த கரும்பு தோகைகளை, அதற்கென உள்ள டிராக்டர் மூலம் இயங்கும் விசை எந்திரம் மூலம் பொடியாக்கி நிலத்தின் மீது நிலப்போர்வையாக செய்து மண்ணின் வளத்தை மேம்படுத்திடும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ.2,400 வீதம் பணி முடிவுற்ற பின்னர் மானியத்தை பயனாளிகளின் வங்கி கணக்கில் மானியத்தொகை வரவு வைத்திட அனுமதிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் அரியலூர் மாவட்டத்திற்கு 300 எக்டர் பரப்பிற்கு ரூ.7.20 லட்சம் மானிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

<u>பருத்திஉழவுஎந்திரம்</u>

தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்க திட்டத்தின் மூலம் பருத்தி சாகுபடியில் எந்திரம் மூலம் இடை உழவு செய்திடுவதை ஊக்கப்படுத்திட 'பவர்வீடர்" என்ற விசை களை எடுக்கும் கருவி ஒன்றுக்கு 50 சதவீத மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.25 ஆயிரம் வீதம் விநியோகிக்கப்பட உள்ளது. அரியலூர் மாவட்டத்திற்கு 4 'பவர்வீடர்கள்"¢ விநியோகித்திட ரூ.1 லட்சம் மானிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்களிடம் தங்களது பெயரினை பதிவு செய்து முன்னுரிமை அடிப்படையில் பயன்பெறலாம். இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில், மாவட்ட வருவாய் அதிகாரி ரவீந்திரன், வேளாண் இணை இயக்குனர் அசோகன், துணை இயக்குனர் (தோட்டக்கலை) சுப்பையா, கலெக்டரின்

நேர்முக உதவியாளர் விஸ்வநாதன் (வேளாண்மை) மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம் குறித்து சிறப்பு கிராம சபைக்கூட்டம்</u>



தர்மபுரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் வருகிற 1-ந்தேதி தொடங்கி 20 நாட்கள் நடக்கிறது. இந்த தடுப்பூசி முகாமை சிறப்பாக நடத்துவது குறித்து அந்தந்த பகுதிகளில் கால்நடைகளை கணக்கெடுத்து தடுப்பூசி போடுவது தொடர்பாக சம்பந்தப்பட்ட பகுதி கால்நடைத்துறை அலுவலர்கள், டாக்டர்களை ஒருங்கிணைத்து அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடத்த உத்தரவிடப்பட்டது. இதன்படி தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 251 ஊராட்சிகளிலும் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் குறித்து விழிப்புணர் வை ஏற்படுத்தும் வகையில் சிறப்பு கிராமசபை கூட்டங்கள் நடந்தன. அந்தந்த பகுதிகளில் நடந்த கூட்டங்களை ஊராட்சிமன்ற தலைவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்கள். இந்த கூட்டங்களில் ஊராட்சிகளில் உள்ள கால்நடைகள் கணக்கெடுக்கப்பட்டு கோமாரி நோய் தடுப்பூசி போடுவதற்கு கால்நடைகளின் உரிமையாளர்கள் உரிய ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்ற வலியுறுத்தப்பட்டது. அதியமான்கோட்டையில் ஊராட்சி தலைவர் சண்முகம் தலைமையில் நடந்த கிராமசபை கூட்டத்தில் கால்நடைத்துறை அலுவலர்கள் மற்றும் கால்நடை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

## <u>வேளாண்மைத்துறை- தோட்டக்கலைத்துறை பணிகள் ஆய்வு கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் மேற்கொண்டார்</u>



நாகர்கோவில், குமரி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை

கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் ஆய்வு செய்தார். கொக்கோ பயிர் தோட்டக்கலைத்துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2014-15 திட்டத்தின்கீழ் மானியம் பெற்ற கொக்கோ பயிர் செய்துள்ள விவசாயிகளான பாம்பன்விளை தர்மலிங்கசாமி, சடையால்புதூர் விஜயலெட்சுமி, கண்ணமங்கலம் பத்மதாஸ் மற்றும் மண்டைக்காடு ஆதிவேல் ஆகியோரது தோட்டங்களில் கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் பார்வையிட்டார். கொக்கோ முதலாமாண்டுக்கு ஹெக்டேருக்கு ரூ.12 ஆயிரமும், இரண்டாமாண்டுக்கு ரூ.4 ஆயிரமும் மானியமாக வழங்கப்பட்டிருந்தது. மிளகு பரப்பு விரிவாக்கம் செய்திருந்த விராலிவிளையைச் சேர்ந்த புஷ்பலட்சுமி தோட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் அங்கு கொக்கோ காயிலிருந்து விதையை பிரித்து எடுக்கும் செயல்விளக்கத்தை தோட்டக்கலைத்துறையினர் செய்து காட்டினர். மேலும் தேனீப்பெட்டி மற்றும் தேனீ குடும்பம் விநியோகம் இனத்தின்கீழ் வழங்கப்பட்ட தேனீப்பெட்டிகள் தேவஅருள்ரவி, துரைராஜ் மற்றும் உமா ஆகியோரது தோட்டங்களில் பார்வையிடப் பட்டது.

காசோலை

மண்புழு தயாரிப்புக்கூடம் நிரந்தர கட்டுமானம் என்ற இனத்தின்கீழ் மண்புழு படுக்கைகள் விஜயலெட்சுமி, துரைராஜ் ஆகியோரது நிலங்களில் பார்வையிடப்பட்டது. வேளாண்மைத்துறை மூலம் மணவிளை மிக்கேல் அந்தோணி தென்னந்தோப்பில் தென்னைவளர்ச்சி வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்ட தென்னை செயல் விளக்கத்திடல் பார்வையிடப்பட்டது. மேலும் அங்கு கதம்பைத்தூள் மூலம் தயாரிக்கப் பட்ட கம்போஸ்ட் உரம் பார்வையிடப்பட்டது. பயனாளிக்கு செயல்விளக்கத்திற்காக ரூ.14 ஆயிரத்துக்கான காசோலை கலெக்டரால் வழங்கப்பட்டது. மேலும் மணவாளக்குறிச்சி பெரியகுளம் ஏலாவில் அட்மா திட்டத்தின்கீழ் உளுந்து பண்ணைப்பள்ளியை கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் தொடங்கி வைத்தார். மேலும் மணவாளக்குறிச்சி அட்மா பண்ணை மகளிர் குழுவிற்கு திறன் வளர்த்தல் இனத்தின்கீழ்

உயர்ரக கோழிக்குஞ்சு கலெக்டரால் வழங்கப்பட்டது. பின்னர் மணவாளக்குறிச்சி பெரியகுளம் ஏலாவில் மிதி உளுந்து விதைப்பு தொடங்கிவைக்கப்பட்டது.

பசுமைக்குடில்

தோட்டக்கலைத்துறை மூலம் உடையார்விளை லல்லுராபின் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர் தொழில்நுட்ப பசுமை குடில் மற்றும் சிப்பம் கட்டும் அறை ஆய்வு செய்யப்பட்டது. பசுமைக்குடிலுக்கான மானியம் ச.மீட்டருக்கு ரூ.467.50 ஆகும். இந்த ஆய்வின்போது வேளாண்மைத் துறை இணை இயக்குநர்(பொறுப்பு) பொன்காத்தபெருமாள், கலெக்டரின் நேர்முக உதவியாளர் நிஜாமுதீன், வேளாண்மை துணை இயக்குநர் சந்திரசேனன் நாயர், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சிவகுமார், தோட்டக்கலை உதவி இயக்குநர் கண்ணன், வேளாண்மை பொறியியல்துறை செயற்பொறியாளர் ஆனந்தராஜா,¢ உதவிப்பொறியாளர் ராதாகிருஷ்ணன், வேளாண்மை உதவி இயக்குனர் அவ்வை மீனாட்சி, வேளாண்மை அதிகாரி கீதா ஆகியோர் உடனிருந்தனர்.

## <u>மானியத்துடன் மாடித்தோட்டம் அமைக்க விண்ணப்பிக்கலாம்</u>
## <u>உசிலம்பட்டி தோட்டக்கலை அதிகாரி தகவல்</u>

உசிலம்பட்டி, நகர தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மானியத்துடன் மாடித் தோட்டம் அமைக்க விண்ணப்பிலாம் என்று உசிலம்பட்டி தோட்டக்கலைத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மானியம்

தமிழக அரசின் நகர தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மானியத்துடன் மாடித் தோட்டம் அமைக்கப்பட உள்ளது. இதுகுறித்து உசிலம்பட்டி தோட்டக்கலை உதவி இயக்குநர் கார்த்திகேயன் தெரிவித்துள்ளதாவது:- பொதுமக்கள் தங்கள் குடியிருப்பில் மானிய விலையில் மாடித்தோட்டம் அமைத்து அன்றாட காய்கறித் தேவைகளை தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் 2014-2015-ஆம் ஆண்டு நகர தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடவடிக்கை

எடுக்கப்பட்டு உள்ளது. அதன்படி ‘நீங்களே தயார் செய்து மாடித்தோட்டம் அமைக்கலாம்’ என்ற திட்டம் மதுரை மாநகர எல்லைக்குட்பட்ட மக்களுக்கு மட்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாடித்தோட்டம் அமைப்பதற்குரிய இடுபொருட்கள் வழங்குவதற்கும் பயனாளிகளுக்கு 50 சத விகித மானியத்தில் காய்கறி விதை, உரம், பயிர் பாதுகாப்பு மருந்து வழங்கப்பட உள்ளது.

ஆன்லைனில்...

ஒரு யூனிட் மாடித்தோட்டம் அமைக்க மானியத்துடன் ரூ.1375 ஆகும். நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக 5 யூனிட் வரை வழங்கப் படுகிறது. இதேபோல் காய்கறி விதைகள் அடங்கிய காய்கறி பை மானியவிலையில் ரூ. 250 மட்டும். இதில் உசிலம்பட்டி அலுவலகம் மூலம் வழங்கப்படும் கிட் எண்ணிக்கை 130 ஆகும். எனவே முன்னுரிமை அடிப்படையில் ஆன் லைன் கணக் கில் செலுத்துபவர்கள் மதுரை தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து மாடித்தோட்ட கிட்டை பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு உசிலம்பட்டி தோட்டக்கலை உதவி இயக்குநர் கார்த்திகேயன் செல் - 9865233343 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>செட்டிகுளம் வணிக வளாகத்தில் 12 டன் சின்ன வெங்காயம் ஏலம்</u>



பெரம்பலூர், பெரம்பலூர் மாவட்டம் செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் திறந்த முறையில் சின்ன வெங்காயம் ஏலம் நடத்தப்பட்டது. இதில் சத்திரமனை, அம்மாபாளையம், நக்கசேலம், மாவிலிங்கை, இரூர், செட்டிகுளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர், சீதேவிமங்கலம், பொம்மனப்பாடி ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தங்களுடைய சின்ன வெங்காயத்தை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டு வந்து

விற்பனை செய்தனர். விழுப்புரம், புதுச்சேரி, செட்டிகுளம், நாட்டார்மங்கலம், சத்திரமனை, பொம்மனப்பாடி, தேனூர், சீதேவிமங்கலம் ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் 178 மூட்டை (12 டன்) சின்ன வெங்காயத்தை ஏலத்தில் எடுத்தனர். அன்றைய தினம் சின்ன வெங்காயம் புதியது அதிகபட்சம் கிலோ ரூ.22-க்கும், விதை வெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ.24-க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ.13-க்கும் விற்பனையானது. இதன் மூலம் ரூ.1 லட்சத்து 56 ஆயிரத்திற்கு சின்ன வெங்காயம் விற்பனை நடைபெற்றது. அனைத்து விவசாயிகளுக்கும் பணம் உடனடியாக வழங்கப்பட்டது.

**பயனாளிகளுக்கு விலையில்லா ஆடு-மாடுகள்**



ராமநாதபுரம் மாவட்டத் தில் இதுவரை 13,394 பய னாளிகளுக்கு தமிழக அரசின் ஆடுகள், மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா ஆடு, மாடு ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2011-2012-ம் ஆண்டு முதல் 2014-2015ம் ஆண்டு வரை 338 ஊராட்சி களில் 13,394 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம் 53,576 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் தலா 4 ஆடுகள் வாங்குவதற்காக ரூ.10,000மும், தீவனத் தொகை யாக ரூ.2,000மும், போக்குவரத்து செலவின மாக ரூ.150ம், காப்பீட்டு செல வினமாக ரூ.300ம், சில்லரை செலவினமாக ரூ.200ம், புகைப் பட செலவினமாக ரூ.50ம், ஆடு வாங் குவதற்கு முன்பும் வாங்கிய பின்பும் அதற்குரிய பயிற்சிக் காக மொத்தம் ரூ.300 என ரூ.13,000 ஒதுக்கீடு செய்யப் பட்டு பயனாளிகளுக்கு வழங் கப்படுகிறது. 2014-15ம் ஆண்டில் ரூ.200 உயர்த்தி ரூ.13,200 வழங்கிட தமிழக முதல்-அமைச்சரால் உத்தரவிடப்பட்டுள்ளது. பயனாளிகளுக்கு வழங்கப் படுகின்ற ஆடுகள் 2

ஆண்டு களுக்கு விற்பனை செய்யக் கூடாது என்கிற நிபந்தனையு டன் வழங்கப்படுகிறது. ராமநாதபுரம் மாவட்டத் தில் பயனாளிகளுக்கு வழங்கப் பட்ட 53,576 ஆடுகளின் மூலம் இதுவரை 84,646 குட்டிகள் ஈன்றெ டுக்கப்பட் டுள்ளன. இதன் கார ணமாக, இந்த பயனாளிகள் இந்த குட்டிகளை 2 ஆண்டுகளுக்குப் பின் விற்பனை செய்து பயன டைந்து வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் இதன் மூலம் தொடர் வருமானம் பெற்று வருகின்றனர்.

**<u>தூத்துக்குடி மீன்வளக்கல்லூரியில் மீன் பதப்படுத்துதல் பயிற்சி</u>**



தூத்துக்குடி, தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் மீன் பதப்படுத்துதலில் உள்ள பிரச்சினைகள் தொடர்பான பயிற்சி முகாம் நேற்று தொடங்கியது.

<u>பயிற்சி முகாம்</u>

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் அமைந்துள்ள மீன்தரப் பாதுகாப்பு மற்றும் உறுதிபாடுக்கான தேசிய சிறப்பு மையம் சார்பில் ''மீன்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட மீன் பொருட்களில் நுண்ணுயிரி களால் ஏற்படக்கூடிய அபாய கணிப்பீடு'' பற்றிய 21 நாட்கள் பயிற்சி நடைபெறுகிறது. இதற்கான தொடக்க விழா நேற்று நடைபெற்றது. தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பாஸ்கரன் மணிமாறன் தலைமை தாங்கினார். சிறப்பு மைய முதன்மை விஞ்ஞானி ஜெயசேகரன் வரவேற்று பேசினார். பயிற்சி பற்றி இரா.ஜெயஷகிலா விளக்கினார்.

<u>தொடக்கவிழா</u>

மங்களூர் நிட்டே பல்கலைக்கழக நுண்ணுயிர் ஆராய்ச்சி மைய இயக்குனர் இந்திராணி கருணாசாகர் பயிற்சியை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர், மீன் நுண்ணுயிர்களால் ஏற்படக்கூடிய

அபாயங்களை விளக்கி கூறினார். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) கோ.சுகுமார், மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தின் தூத்துக்குடி மைய பொறுப்பு அலுவலர் மதன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். பேராசிரியர்து.சுகுமார்நன்றிகூறினார்.

<u>தொடர்பயிற்சி</u>

பயிற்சியில் நாடு முழுவதிலும் இருந்து 15 மீன்வள விஞ்ஞானிகள் மற்றும் உதவி பேராசிரியர்கள் பங்கேற்று உள்ளனர். பயிற்சியில், மீன்களை உண்ணும் போது மற்றும் மீன்பொருட்களை பதனம் செய்து சேமிக்கும் போது ஏற்படக்கூடிய பல்வேறு நுண்ணுயிர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை கண்டறிவது பற்றியும் மீன் உணவின் மூலம் மனிதனுக்கு கேடு விளைவிக்க கூடிய நுண்ணுயிரிகள் பற்றியும் அதன் தாக்கங்கள் பற்றியும் விளக்க உரைகளும், செய்முறை பயிற்களும், பல்வேறு தரப்பரிசோதனை முறைகள் ஆகியவை அளிக்கப்பட உள்ளன.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நாளை தொடங்குகிறது கலெக்டர் தகவல்</u>



வேலூர், கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) தொடங்கி வருகிற 21–ந் தேதி (சனிக்கிழமை) வரை நடக்கிறது. இதுகுறித்து மாவட்ட கலெக்டர் நந்தகோபால் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியிருப்பதாவது:–

<u>கோமாரிநோய்</u>

கோமாரி நோயானது வைரஸ் என்று சொல்லப்படுகின்ற நச்சுயிரியின் மூலம் கால்நடைகளுக்கு பரவுகிறது. இதனால் கால்நடைகளுக்கு அதிக பாதிப்பு உண்டு. கோமாரி நோயானது தீவனம், தண்ணீர், காற்று மற்றும் கால்நடைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பழகுவதாலும் பரவுகிறது. பொதுவாக இந்த நோய் கோடை காலத்தில் அதிகமாக பரவுகிறது. ஆரம்ப கட்டத்தில் கால்நடைகளுக்கு 41 டிகிரி செல்சியஸ் வரை

காய்ச்சல் இருக்கும். இதன் முக்கிய அறிகுறியாக கால்நடைகளின் வாயில் இருந்து சளி போன்ற நுரையுடன் கெட்டியான உமிழ்நீர், கம்பி போன்று தொங்கி கொண்டிருக்கும். வாயின் உட்பகுதி, நாக்கின் மேல்புறம், மடி, காம்புகளில் நீர்க்கோர்த்த கொப்புளங்கள் மற்றும் புண்கள் ஏற்பட்டு தீவனம் உட்கொள்ள முடியாத நிலையும், நடக்க முடியாத நிலையும் ஏற்படும். சினையுற்ற மாடுகளுக்கு கருச்சிதைவும் ஏற்படலாம். பால் உற்பத்தியும் கணிசமான அளவிற்கு பாதிக்கப்படும். கால்நடை நோய்களுள் கோமாரி நோய் மிக முக்கிய நோயாகும்.

<u>முகாம்நாளைதொடக்கம்</u>

எனவே, இந்த நோயினை 100 சதவீதம் கட்டுப்படுத்திட மத்திய அரசின் நிதி உதவியுடன் ஒவ்வொரு கால்நடை மருந்தக கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் "கோமாரி நோய்" கட்டுப்படுத்துதல் திட்டத்தின், 8–வது சுற்று தடுப்பூசி முகாம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) தொடங்கி வருகிற 21–ந் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த முகாமிற்காக வேலூர் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவில் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் ஆவின் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் குழுக்கள் அமைக்கப்பட்டு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி மன்ற தலைவர்களும் 'தண்டோரா' மூலமாகவும், ஒலிபெருக்கி மூலமாகவும் பொதுமக்களுக்கு இதன் விவரத்தினை தெரிவித்து, அனைத்து கால்நடைகளுக்கும் இந்த தடுப்பூசி பணி மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த முகாமில் விவசாயிகள், பண்ணையாளர்கள், கால்நடை வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் தொழில் முனைவோர் ஆகியோர் தங்கள் கால்நடைகளை அழைத்து வந்து கால்நடை பராமரிப்புத் துறையினர் மூலம் கால்நடைகளுக்கு தடுப்பூசியினை போட்டு பயன் பெற வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.